**SMSGenie – MAICCI Reach Out SMS**

Malaysia Nanban - 7th Sept 2006

Page: 5

# இந்திய வர்த்தகர் சபை நிகழ்வுகளைத் தெரிந்து கொள்ள

# மைக்கியின் குறுஞ்செய்தி சேவை

கோலாலம்பூர், செப்.7-

மலேசிய இந்தியர் கூட்டு வர்த்தகர் மற்றும் தொழில் சபையின் (மைக்கி) நிகழ்ச்சிகள் மற்றும் வர்த்தகச் செய்திகள் பற்றி உறுப்பினர்களுக்கு தெரிவிக்கும் வகையில் 'எஸ்எம்எஸ்' குறுஞ்செய்திச் சேவையை தொடங்கியுள்ளது.

கோலாலம்பூரில் உள்ள 'மைக்கி' தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் மஇகா உதவித் தலைவர் டான்ஸ்ரீ கே.எஸ்.நிஜார் இந்த எஸ்எம்எஸ் சேவையை தொடக்கி வைத்தார்.

'எஸ்எம்எஸ்' வழி மைக்கியுடன் தொடர்பு கொள்ள இந்தக் குறுஞ்செய்தி சேவையை பயன்படுத்த விரும்பும் சபையின் உறுப்பினர்கள் MAICCI<NAME> என டைப் செய்து 33737 என்ற எண்ணுக்கு அனுப்பி முதலில் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

கைத்தொலைபேசிச் சேவை வழங்கிவரும் ஸ்டெல்லார்நெட் சென்.பெர்ஹாட் நிறுவனத்துடன் இணைந்து இச்சேவை தொடங்கப்பட்டுள்ளது.

இந்திய வர்த்தகர்கள் பல்வேறு வாணிபத் துறைகளைச் சார்ந்த தகவல்களை உடனுக்குடன் அறிந்து செயல்பட இந்த குறுஞ்செய்திச் சேவை மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று 'மைக்கி' தலைவர் திரு.பர்டீப் குமார் குத்ரஜா கூறினார்.

இந்தக் குறுஞ்செய்திச் சேவையை அனைத்து உறுப்பினர்களும் பெற்று பயன்பெறுமாறு அவர் கேட்டுக் கொண்டார்.

'மைக்கியின்' உறுப்பினர்கள் எண்ணிக்கை இவ்வாண்டு இறுதிக்குள் இன்னும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக திரு.பர்டீப் குமார் கூறினார்.

மலேசிய இந்திய கூட்டுத் தொழில் வர்த்தக சபை உறுப்பினர்கள் மத்தியில் இந்தக் குறுஞ்செய்தி சேவைக்கு அமோக வரவேற்பு கிடைக்கும் என ஸ்டெல்லார்நெட் நிறுவன நிர்வாக அதிகாரி திரு.பன்னீர் செல்வம் நம்பிக்கை தெரிவித்தார்.



*டத்தோ கே.எஸ்.நிஜார், பிரதீப் குமார் மற்றும் இந்தியர் கூட்டுத் தொழில் வர்த்தக சபை பொறுப்பாளர்கள். (படம்: பெருமாள்)*